# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

மனு எண்: 1480/2017/ ஊராட்சி

ஆணை எண்: 253 /2017

நாள்: 3/11/2017

S. ஜோதி,
1/72, குடித்தெரு,
கொத்தாம்பாடி, ஆத்தூர் வட்டம்,
சேலம் மாவட்டம். - மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம். - எதிர் மனுதாரர்

## ஆணை

சேலம் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், கொத்தாம்பாடி ஊராட்சியில் வசிக்கும் திருமதி. ஜோதி, அவருடைய 21.10.17 நாளிட்ட கடிதத்தில், அவர் சேலம் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், கொத்தாம்பாடி சர்வே எண்.20/1, பட்டா எண்.63ல் உள்ள இடத்தில் 5 குடிசைகள் கட்டி, அதில் இரண்டு குடிசையில் தான் வசிப்பதாகவும், மீதமுள்ள மூன்று குடிசைகளை வாடகைக்கு விட்டு, அதில் வரும் வருமானத்தில் குடும்பம் நடத்திவருவதாகவும், ஐந்து குடிசைகளுக்கு கதவு எண்கள்.1/72, 1/72-A, 1/72-B, 1/72-C மற்றும் 1/72–D, வழங்கப்பட்டுள்ளன என்றும், ஆனால் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் மேற்படி வீடுகளுக்கு கெட்ட எண்ணத்துடன் வரிபோட்டு, ரசீதுகள் வழங்காமல் தன்னை கஷ்டப்படுத்துவதாக தெரிவித்து, மேற்கண்ட வீடுகளுக்கு வீட்டு வரி ரசீது வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)–ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு கொத்தாம்பாடி ஊராட்சியை சார்ந்தது ஆகும். எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 6/11/17

பெறுநர்

திருமதி. S. ஜோதி,
க/பெ. செல்வராஜ்,
1/72, குடித்தெரு,
கொத்தாம்பாடி, ஆத்தூர் வட்டம்–636 109.
சேலம் மாவட்டம்.

நகல்

1. மாவட்ட ஆட்சித்தலைவர்,
   சேலம் மாவட்டம்.
   சேலம் (இணைப்புகளுடன்)
2. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
3. ஊராட்சி பிரிவு
4. உதிரி–1